**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.3**
**OS.NO.56/2018(c/w.24/2019,66/2019,57/2019)**

**Name** : Dhanalakshmi
**Father/Husband Name** : Panneerselvam

**Age** : 55

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.06.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்:** 12.55 p.m

**1 முதல் 7 பிரதிவாதிகள் சார்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

அசல் வழக்கு எண். 24/2019 ல் நான் 2ம் பிரதிவாதி. அந்த வழக்கில் 1வது பிரதிவாதி பன்னீர் செல்வம் என் கணவர் காலமாகிவிட்டார். பிரதிவாதிகள் 3 முதல் 6 ஆகியோர்கள் என்னுடைய பிள்ளைகள். இந்த வழக்கில் தாவா சொத்து 324/1B1 சொத்தை கோவிந்தசாமி என்பவர் 07.02.1978 ல் கூரச்சீட்டு படிக்கு அனுபவித்து வந்தார் என்றால் அது பொய். அவருடைய சகோதரர் சாம்பசிவம் என்பவரும் அவருக்கு வந்த 50 சென்ட் பாகத்தை அனுபவித்து வந்தார் என்றால் பொய். நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். கோவிந்தசாமி உயிருடன் இருக்கும் போது என் மாமனார் அனுபவித்து வந்தார் என்று காட்டுவதற்கு மாமனார் பெயரில் உள்ள பட்டா மற்றும் சிட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த சொத்து நேராக எங்கள் பெயருக்கு வந்தது.

அசல் வழக்கு எண். 24/2019 ல் இன்று வரை தாவா சொத்தை கோவிந்தசாமி வகையறாக்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் தவறு, இந்த சொத்து குறித்து பன்னீர் செல்வம் மற்றும் லிங்கமூரத்தியும் அசல் வழக்கு

தாக்கல் செய்து அது தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அதன் மேல் மேல்முறையிடு செய்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த நேரத்தில் என் கணவர் உயிருடன் இருந்தார். என் கணவரும் என் மச்சனரும் தான் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல எனக்கு நேரடியாக தெரியும்.இந்த தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காகதான் 03.07.2015 ல் பொய்யான தான பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அந்த தான பத்திரத்தில் இந்த தாவா சொத்து மற்றும் சாம்பசிவத்திற்கு ஒதுக்கப்பட்ட 50 சென்ட் இரண்டும் சேர்த்துதான் மேற்படி 03.07.2015 அன்று செட்டில்மென்ட் எழுதப்பட்டது என்றால் சரிதான்.

என் கணவர் 30.05.2021 ல் இறந்தார் என்றால் சரிதான். இந்த தாவா சொத்து வாதிகளுக்கு தான் பாத்தியப்பட்டது என்றாலும் எனக்கு பாத்தியப்பட்டதில்லை என்றாலும் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்த அசல் வழக்கு 24/2019 அவர்கள் கோரியப்படி தீர்ப்பாக வேண்டியது என்று சொல்வது சரியல்ல. ஏற்கனவே வாதிகள் 18.06.2013 அன்று பதிவு செய்யப்பட்ட பாக பிரிவினை பத்திரம் முன்னிலைக்கு தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை பிரித்து கொண்டார்கள் என்றால் தவறு.

அதேபோல் அதே சர்வே எண்ணில் மற்றொரு 50 சென்ட் சொத்து குறித்து வாதிகள் 57/2019 என்று வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் தவறு. அந்த வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அதில் லிங்கமூர்த்தி என்பவர் அவரது மகன் புவின் என்பவர் பெயரில் ஏற்படுத்தப்பட்ட தான பத்திரம் சம்மந்தமானது என்றால் சரிதான்.

அந்த தான பத்திரமும் கடந்த 03.07.2015 அன்று ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரிதான். என் தான பத்திரம் பன்னீர் செல்வம் பெயரில் உள்ள பத்திரத்தின் ஆவண எண் தெரியுமா என்றால் தெரியாது. புவின் பெயரில் உள்ள ஆவணம் இருக்கிறது என்று தான் தெரியுமே தவிர ஆவண எண் எனக்கு

தெரியாது.

அதேபோல் செல்வம் என்பவர் அசல் வழக்கு 66/2019 லிங்கமூர்த்தி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்யப்பட்டது தெரியுமா என்றால் தெரியாது. தனலட்சுமி, செல்வி மற்றும் செல்வகுமார் ஆகியோர்கள் தெரியுமா என்றால் தெரியும் அவர்கள் காலமான ரவியின் வாரிசுகள் என்றால் சரிதான். சர்வே எண். 324/1B1 ல் 50 சென்டிற்கு மேற்படி ரவியின் வாரிசுத்தாரர்கள் அசல் வழக்கு 66/2019 வாதி செல்வத்திற்கு பாக பாத்திய அக்குவிடுதலை பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் அந்த ஆவணம் பொய்யானது.

மேற்படி ஆவணங்கள் முன்னிலைக்கு இந்த வழக்கின் வாதி செல்வம் என்பவர் தான் சர்வே எண். 324/1B1 ல் 50 சென்டில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் பொய். கடந்த 24.10.2017 அன்று லிங்கமூரத்தி என்பவர் செல்வத்தின் சுவாதீனத்தை தடை செய்தார் என்றால் எங்கள் சொத்து என்பதால் தடை செய்தோம். தாவா சொத்து சர்வே எண். 324/1B1 ல் 50 சென்ட் செல்வம் சுவாதீனத்தில் தான் இருக்கிறது என்றாலும் எங்கள் சுவாதீனத்தில் எப்போதும் இருந்ததில்லை என்றாலும் சரியல்ல.

என் தாத்தா ஆதிமூல கவுண்டர் எழுதி கொடுத்த உயில் பொய்யான உயில் என்றால் சரியல்ல. அந்த உயிலில் ஆதிமூல கவுணடரின் கையெழுத்தே பல இடத்தில் பல மாதிரி உள்ளது என்றாலும் அந்த நேரத்தில் அவருக்கு மனநிலை மற்றும் உடல்நிலை சரியில்லை என்றால் சரியல்ல. கூரச்சீட்டிற்கு பின்னிட்டு மேற்படி உயில் எழுதுவதற்கு ஆதிமூல கவுணடருக்கு எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி 50 சென்ட் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யான தகவல்கள் அடிப்படையில் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்களோ லிங்கமூரத்தியின் வாரிசுகளோ எந்த காலத்திலும் அனுபவத்தில் இல்லை என்று சொல்வது சரியல்ல.

நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம் என்று காட்டுவதற்கு அடங்கல்

எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் தாக்கல் செய்த வழக்கிற்கு தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த 56/2018 வழக்கு பிரதிவாதிகளின் செலவு தொகையும் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்த அசல் வழக்கு 24/2019 , 57/2019 மற்றும் 66/2019 ஆகிய வழக்குகள் வாதிகளின் செலவு தொகையும் அவர்கள் கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்று சொல்வது சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்:** 01.25 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.